# தமிழ்க் கல்வி நிலையம், ஹோம்புஷ்
# Tamil Study Centre, Homebush Inc.

**Postal Address: P O Box 4019, Homebush, NSW 2140**

www.tsch.org.au
info@tsch.org.au


**பேச்சுப்போட்டி 2022** **ஆண்டு எட்டு**

அனைவருக்கும் வணக்கம்

## கவிச்சக்கரவர்த்தி கம்பர்

“விருத்தமெனும் ஒண்பாவில் உயர் கம்பன்” என்று போற்றப்படுபவர் கம்பர். அவர் தமிழ்நாட்டிலுள்ள திருவழுந்தூரில் பிறந்தார். தமிழ் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுப் பெரும் புலவராய் விளங்கினார்.

வடமொழியில் வால்மீகி முனிவர் எழுதிய இராமாயணக் கதையைக் கம்பர் படித்துச் சுவைத்தார். அக்கதை கம்பரின் உள்ளத்தை மிகவும் கவர்ந்தது. அதனால் அதைத் தமிழில் எழுத ஆர்வம் கொண்டார்.

கம்பர் இராமகதையைத் தமிழில் காவியமாக எழுதி முடித்தார். இராம காவியத்தைத் திருவரங்கத்தில் அரங்கேற்றம் செய்ய விரும்பினார். அந்த அரங்கேற்றத்தைக் காணப் புலவர்களும் அறிஞர்களும் குழுமினர்.

அவர்கள் முன்னிலையில் கம்பர் தாம் எழுதிய இராமாயணத்தைப் பாடி அரங்கேற்றினார். அப் பாடல்களில் அமைந்திருந்த சொல்லழகும் பொருளழகும் கற்பனை நயமும் கூடியிருந்தோரை வியப்பில் ஆழ்த்தின. புலவர்கள் கம்பரின் கவிப்புலமையைப் பாராட்டிக் “கவிச்சக்கரவர்த்தி” என்று பட்டமளித்தனர். அவர் இயற்றிய காவியத்தைக் “கம்பராமாயணம்” என்று போற்றினர்.

நன்றி
வணக்கம்